# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of District Munsif cum Judicial Magistrate No. I, Usilampatti**

**Case No. C.C - 163/2023**

**Deposition of Witness for Prosecution : P.W.2**

| | | | |
|---|---|---|---|
| Name | : சாரதி | Caste | : |
| Father/Husband Name | : திலிப்குமார் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(A1 , A2 Accused Present )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 02.07.2026.**

**முதல் விசாரணை**

நான் சமத்துவபுத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். எதிரிகள் எனக்கு உறவினர்கள் ஆவார்கள். அரசு தரப்பு சாட்சிகளை தெரியும். கடந்த 2023ம் ஆண்டு எதிரிகளின் மீது இருந்த மனக்கசப்பின் காரணமாக எனது கணவரான அ.சா.1 மிகைப்படுத்தி புகார் கொடுத்து விட்டார். நாங்கள் தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

1. கடந்த 21.07.2023ம் தேதி இரவு 8.00 மணியளவில் நானும், எனது கணவரும் எனது வீட்டின் முன்பு பேசிக்கொண்டிருந்தபோது எங்கள் எதிர் வீட்டிலிருந்த விஜயலட்சுமி என்பவர் தகாத வார்த்தைகளால் பேசிக்கொண்டிருந்ததாகவும், அதை எனது கணவர் தட்டிக் கேட்டபோது அவரது உறவினரான எதிரிகள் அங்கே வந்து எனது கணவரை

பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் பேசினார்கள் என்றும், இரண்டு எதிரிகள் சேர்ந்து எனது கணவரின் முகத்தில் கையால் மாறி மாறி குத்தினார்கள்



என்றும், அப்போது அருகில் இருந்த சாட்சிகள் சண்டையை விலக்கிவிட்டபோது எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்து சென்றார்கள் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS

## Chapter XXIII Code of Criminal Procedure

## In the Court of District Munsif cum Judicial Magistrate No. I, Usilampatti

## Case No. C.C - 163/2023

## Deposition of Witness for Prosecution : P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | : திலிப்குமார் | Caste | : |
| Father/Husband Name | : கஜேந்திரன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : 30 |

**(A1 , A2 Accused Present )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 02.07.2026.**

**முதல் விசாரணை**

நான் சமத்துவபுத்தில் வசித்து வருகிறேன். 1வது எதிரி எனக்கு தம்பி முறை ஆவார். அரசு தரப்பு சாட்சிகளை தெரியும். கடந்த 2023ம் ஆண்டு எதிரிகளின் மீது இருந்த மனக்கசப்பின் காரணமாக மிகைப்படுத்தி புகார் கொடுத்து விட்டேன். நான் தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டேன். சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன். சந்தேகத்தின்பேரில் எதிரிகள் மீது நான் கொடுத்த புகார் மனு (**அ.சா.ஆ 1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

1. கடந்த 21.07.2023ம் தேதி இரவு 8.00 மணியளவில் நானும், எனது மனைவியும் எனது வீட்டின் முன்பு பேசிக்கொண்டிருந்தபோது எங்கள் எதிர் வீட்டிலிருந்த விஜயலட்சுமி என்பவர் தகாத வார்த்தைகளால் பேசிக்கொண்டிருந்ததாகவும், அதை நான் தட்டிக்

கேட்டபோது அவரது உறவினரான எதிரிகள் அங்கே வந்து என்னை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் பேசினார்கள் என்றும், இரண்டு எதிரிகள்



சேர்ந்து என்னை முகத்தில் கையால் மாறி மாறி குத்தினார்கள் என்றும், அப்போது அருகில் இருந்த சாட்சிகள் சண்டையை விலக்கிவிட்டபோது எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்து சென்றார்கள் என்றும், நான் கொடுத்த புகாரிலும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.